# நாட்டிலேயே அதிகம் தொழில்மயமாக்கப்பட்ட மாநிலம் தமிழ்நாடு!

## முதல்வர் உரை...! முதல் பக்கத் தொடர்ச்சி

மக்கள் பிரதிநிதிகளுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**சிறப்பான விழா ஏற்பாடு!**
**மாவட்ட ஆட்சியருக்குப் பாராட்டுகள்!**

அதேபோல், மாவட்ட ஆட்சியர் திருமதி. சிவசௌந்தரவல்லி அவர்கள், மிகச்சிறப்பாகச் செயல்பட்டு, இந்த விழா சிறப்பாக நடைபெறக் காரணமாக இருக்கிறார்! அவருக்கும், அவருக்குத் துணை நிற்கக்கூடிய மாவட்டத்தைச் சார்ந்திருக்கக்கூடிய அரசு அலுவலர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**தமிழ்நாட்டின் வரலாறு காணாத வளர்ச்சி!**

இன்று நாம் பெருமையோடும், மகிழ்ச்சியோடும் இந்த விழாவில் பங்கேற்று இருக்கிறோம் என்று சொன்னால், தமிழ்நாட்டின் நலன் மேல் அக்கறை இல்லாத கடந்தகால ஆட்சியாளர்களால் சீரழிந்த தமிழ்நாட்டின் வளர்ச்சியை நம்முடைய திராவிட மாடல் அரசு, இந்த நான்காண்டுகளில் மீட்டெடுத்து, வரலாறு காணாத வளர்ச்சிக்கு நாம் கொண்டு சென்றிருக்கிறோம்!

இதை நான் தமிழ்நாட்டின் முதலமைச்சராகச் சொல்கிறேன் என்று நீங்கள் கருதவேண்டிய அவசியமில்லை.

**தமிழ்நாட்டுக்கு ஓரவஞ்சனை செய்யும் ஒன்றிய அரசால் கூட, நம்முடைய வளர்ச்சியை மறைக்க முடியவில்லை! அதனால்தான், ஒன்றிய அரசே, தமிழ்நாடு 9.69 விழுக்காடு வளர்ச்சியுடன் இந்தியாவின் மற்ற மாநிலங்களைவிட, பொருளாதார வளர்ச்சியில் புதிய உச்சத்தை அடைந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறது! இந்தியாவின் G.D.P-யில் நம்முடைய பங்கு எவ்வளவு தெரியுமா? 9.21 விழுக்காடு! அதாவது, நாட்டின் வளர்ச்சியில் நூற்றில் பத்து விழுக்காட்டில் நாம் இருக்கிறோம்!**

**நாட்டிலேயே அதிகம்**
**தொழில்மயமாக்கப்பட்ட மாநிலம் தமிழ்நாடு!**

அதுமட்டுமல்ல, சமூக முன்னேற்றக் குறியீடுகளிலும், நாம்தான் முதலிடத்தில் இருக்கிறோம்! உயர்கல்வி சேர்க்கை விகிதத்தில், முதலிடம் தமிழ்நாடு! வறுமை இல்லாத நிலையை உருவாக்குவதில் இரண்டாவது இடம் நாம் இருக்கிறோம்! நீடித்த வளர்ச்சிக் குறியீட்டிலும் - மருத்துவக் குறியீட்டிலும் மூன்றாவது இடம்! பணவீக்கம் குறைந்த மாநிலம்! நாட்டிலேயே அதிகம் தொழில்மயமாக்கப்பட்ட - நகரமயமாக்கப்பட்ட மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு வளர்ந்து வருகிறது!

**எல்லா மாவட்டங்களுக்கும் எல்லாம்!**

வேளாண்துறை மூலமாக பாசனப் பரப்பும், வேளாண் உற்பத்தியும் அதிகமாகி இருக்கிறது! தொழிலாளர்கள் அதிகரித்து இருக்கிறார்கள்! தேசிய சராசரியைவிட, தமிழ்நாட்டில், தனிநபர் வருமான வளர்ச்சி பல ஆண்டுகளாக அதிகமாக இருக்கிறது! இந்த வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணம், தலைநகரான சென்னையைச் சுற்றி மட்டும் வளர்ச்சி என்று செயல்படாமல், தமிழ்நாட்டின் அத்தனைப் பகுதிகளுக்கும் தொழில் வளர்ச்சி சென்றடைய வேண்டும் என்று செயல்படுவதுதான் காரணம்! 'எல்லாருக்கும் எல்லாம்' என்பது போல் - 'எல்லா மாவட்டங்களுக்கும் எல்லாம்' என்கிற வகையில் தொழில் நிறுவனங்களை உருவாக்கி, வேலைவாய்ப்புகளை வழங்குகிறோம். இதனால்தான், நகரப் பகுதிகளைப் போலவே கிராமப் பகுதிகளும் வளருகிறது!

**திருப்பத்தூருக்கு திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள்!**

நான் கோட்டையிலிருந்து மட்டும் பணிகளைச் செய்யவில்லை. தொடர்ந்து மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறேன். குறைந்தது ஒரு மாதத்திற்கு மூன்று மாவட்டங்களுக்குச் செல்கிறேன். இந்த மாதத்தில் மட்டும் சேலம் மாவட்டம் - தஞ்சாவூர் மாவட்டத்திற்கு அடுத்து, இப்போது திருப்ப த்தூருக்கு வந்திருக்கிறேன்!

நம்முடைய திரு ப்பத்தூருக்கு திராவிட மாடல் ஆட்சியில் செய்யப்பட்டிருக்கும் திட்டங்களைப் பட்டியலிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், சுருக்கமாகச் சொல்கிறேன் - தலைப்புச் செய்திகளாகச் சொல்கிறேன்.

- 182 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பத்தூரில் குடிநீர்த் திட்டம் செயல்பாட்டுக்கு வந்திருக்கிறது!
- 425 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்றுள்ளது!
- 14 பாலங்கள் கட்டப்பட்டிருக்கிறது!
- பள்ளிக்கூடங்களில் 114 அறிவியல் ஆய்வகங்கள் அமைத்திருக்கிறோம்! பள்ளிகளை மேம்படுத்த 489 பணிகள் நடைபெற்றிருக்கிறது!
- அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஆயிரத்து 536 உள்கட்டமைப்புப் பணிகள் நடைபெற்றிருக்கிறது!
- 211 கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தியிருக்கிறோம்!
- அதுமட்டுமல்ல, தொடர்ச்சியாக, முக்கியமாக நாட்றாம்பள்ளி வட்டத்தில் 125 ஏக்கர் பரப்பளவில் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2500 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய தோல் அல்லாத காலணி உற்பத்திப் பூங்கா அமைக்கப்பட இருக்கிறது!
- திருப்பத்தூர், வாணியம்பாடி மற்றும் ஆம்பூரில் பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள் அமைய இருக்கிறது!
- 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில், விளையாட்டு வளாகம் அமைகின்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.
- ஏலகிரி மலையில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுச்சாலை மேம்படுத்தப்பட இருக்கிறது!
- ஏலகிரி சுற்றுலா வசதிக்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதோடு ஒன்றியச் சாலைகள், மாவட்டச் சாலைகளாக தரம் உயர்த்தப்பட இருக்கிறது!

இப்படி ஏராளமான பணிகளும், திட்டங்களும் நம்முடைய திருப்பத்தூருக்காக செய்யப்பட இருக்கிறது! செய்து கொண்டிருக்கிறோம்.

**திருப்பத்தூர் மாவட்டத்திற்கு திராவிட மாடல் அரசின் முத்திரைத் திட்டங்கள்!**

அதுமட்டுமல்ல, திராவிட மாடல் அரசின் முத்திரைத் திட்டங்கள் என்று பல இருக்கிறது. அதில் இந்த திருப்பத்தூர் மாவட்டத்திற்கு மட்டும் பயனடைகின்றவர்கள் விவரத்தை தலைப்புச் செய்தியாகச் சொல்கிறேன்...

- **கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில், ஒரு இலட்சத்து 74 ஆயிரம் மகளிர் மாதம் ஆயிரம் ரூபாய் பெறுகிறார்கள்! இந்த 1000 ரூபாய் பெறக்கூடிய மகளிர் உரிமைத் தொகையைப் பற்றிச் சொல்கின்ற போது, நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். சில பகுதிகளில், அது கிடைக்காத, விடுபட்டிரு க்கக்கூடிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. எல்லோருக்கும் தெரியும். அதனால், விடுபட்டிரு க்கக்கூடிய அந்தத் தாய்மார்களின், மகளிரின் கணக்கெடுத்து அதை விரைவில், ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதத்தில் உடனடியாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.**
- **முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில், 42 ஆயிரம் மாணவர்கள் சத்தான உணவை சூடாக சுவையாகச் சாப்பிடுகிறார்கள்!**
- **ஏழாயிரம் மாணவிகளுக்கு 'புதுமைப் பெண்' திட்டத்தில் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது!**
- **ஐந்தாயிரம் மாணவர்களுக்கு 'தமிழ்ப் புதல்வன்' திட்டத்தில் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது!**
- **'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தில் 4 இலட்சத்து 41 ஆயிரம் பேர் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள்!**
- **இருபதாயிரம் பேருக்கு நகைக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது!**
- **கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 94 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள்!**
- **3 இலட்சத்து 45 ஆயிரம் பெண்களுக்கு சுய உதவிக் குழு கடனாக ஆயிரத்து 754 கோடி ரூபாய் தரப்பட்டிருக்கிறது!**
- **ஏழாயிரம் பேருக்கு வீடு தரப்பட்டுள்ளது.**
- **1041 குழந்தைகளுக்கு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்ட நிதி வழங்கப்பட்டிருக்கிறது!**
- **30 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது!**
- **ஆயிரத்து 36 குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து வழங்கப்பட்டிருக்கிறது!**
- **41 ஆயிரம் மாணவ- மாணவியருக்கு சைக்கிள் வழங்கப்பட்டிருக்கிறது!**
- **2 ஆயிரம் மாற்றுத் திறனாளிகளுக்கு தேவையான கருவிகள் வழங்கப்பட்டிருக்கிறது!**
- **அமைப்புசாராத் தொழிலாளர்களில், 82 ஆயிரம் பேர் பல்வேறு நிதி உதவிகளைப் பெற்றிருக்கிறார்கள்!**
- **19 திருநங்கையர்களுக்கு தொழில் தொடங்க உதவி செய்யப்பட்டிருக்கிறது!**
- **18 ஆயிரம் பழங்குடியினருக்கு எஸ்.டி. சான்றிதழ் தரப்பட்டிருக்கிறது!**
- **அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தில், 56 பேருக்கு மானியத்துடன் கடனுதவி தரப்பட்டிருக்கிறது.**
- **இந்த மாவட்டத்தில் மட்டும் 27 ஆயிரம் பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது!**
- **இந்த நேரத்தில், நான் பெருமையாக ஒரு செய்தியைச் சொல்கிறேன்... ஐந்து மாதங்களுக்குள் தமிழ்நாடு முழுவதும் ஐந்து இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டும் என்று வருவாய்த் துறையினருக்கு ஒரு இலக்கை நாங்கள் நிர்ணயித்தோம். ஆனால், இன்று அந்த இலக்கையும் தாண்டி, டிசம்பர் 2024-இல் இருந்து, தற்போதுவரைக்கும் மொத்தம் ஆறு இலட்சத்து 91 ஆயிரத்து 728 வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியிருக்கிறோம்!**

இப்படி ஒவ்வொருவருக்கும் பார்த்துப் பார்த்து திட்டங்களைச் செய்து வழங்கிக் கொண்டிருக்கிறோம்!

**திருப்பத்தூர் மாவட்டத்துக்கு ஐந்து அறிவிப்புகள்!**

இன்றைக்கு காலையில் கூட திருப்பத்தூருக்கு என்னென்ன தேவைகள் என்று கேட்டேன், கேட்டுவிட்டு, அறிவிப்பு செய்யாமல் இருக்க முடியுமா? அதனால்தான் இந்த மாவட்டத்திற்கான ஐந்து அறிவிப்புகளை இப்போது வெளியிட விரும்புகிறேன்.

**அண்ணா பெயரையும், கட்சியையும் அடமானம் வைத்தவர்களை தமிழ்நாட்டை அடமானம் வைக்க அனுமதிக்கக் கூடாது!**

**முதலாவது அறிவிப்பு**

ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கக்கூடிய நெக்னாமலை பகுதியில் வாழும் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லவும் - பொதுமக்கள் மருத்துவ வசதிகளைப் பெறவும் - வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்யவும் - 30 கோடி ரூபாய் செலவில், ஏழு கிலோமீட்டர் நீளமுள்ள சாலை அமைக்கப்படும்!

**இரண்டாவது அறிவிப்பு**

குமாரமங்கலம் பகுதி மக்களுக்கு சீரான மின் விநியோகத்தை உறுதிசெய்கின்ற வகையில், அந்தப் பகுதியில் ஆறு கோடி ரூபாய் செலவில் - புதிய துணை மின்நிலையம் அமைக்கப்படும்!

**மூன்றாவது அறிவிப்பு**

நல்லகுண்டா பகுதியில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள தோல் அல்லாத காலணி உற்பத்திப் பூங்காவை ஒட்டி, 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கும் வகையில், 250 ஏக்கர் பரப்பளவில், 200 கோடி ரூபாய் செலவில் - புதிய 'சிப்காட்' தொழில் பூங்கா அமைக்கப்படும்!

**நான்காவது அறிவிப்பு**

திருப்பத்தூர் நகரத்தின் மையப்பகுதியில், பழைய பேருந்து நிலையம் அமைந்திருக்கும் இடத்தில், 18 கோடி ரூபாய் செலவில், அடுக்குமாடி வணிக வளாகம் அமைக்கப்படும்!

**ஐந்தாவது அறிவிப்பு**

ஆம்பூர் நகர மக்கள் பயன்பெறும் வகையில், ஒரு கோடி ரூபாய் செலவில், புதிய நூலகக் கட்டடம் கட்டப்படும்!

**மக்களின் மகிழ்ச்சியே என்னுடைய மகிழ்ச்சி!**

நாம் அறிவிப்புகள் மட்டும் செய்வதில்லை; அவற்றை விரைந்து செயல்படுத்தி, அதையும் தொடர்ந்து ஆய்வு செய்து கொண்டு இருக்கிறோம்! நேற்று, நான் திருப்பத்தூர் வரும் வழியில், பூதூர் ஊராட்சியில் இருக்கும் 'கலைஞர் கனவு இல்லத்திற்கு'ச் சென்று பார்வையிட்டேன். அங்கு குடியி ருந்த ஒரு தாயை - அவருடைய வீட்டிற்குச் சென்று நான் சந்தித்தேன். அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவர்கள் மகிழ்ச்சிதான் என்னுடைய மகிழ்ச்சியும்!

முத்தமிழறிஞர் கலைஞரின் முக்கியமான கனவுகளில் ஒன்று, "குடிசையில்லா தமிழ்நாடு"! அந்தக் கனவை நனவாக்கும் வகையில், கலைஞரின் பெயரிலான கனவு இல்லம் திட்டத்தில் வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் 6 ஆண்டுகளில், எட்டு இலட்சம் கான்கிரீட் வீடுகளை கட்டித் தரப் போகிறோம். ஒரு வீட்டுக்கு மூன்றரை இலட்சம் ரூபாய் தருகிறோம். கடந்த இரண்டு ஆண்டில் மட்டும் இரண்டு இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு 7 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தோம். அதில், 90 ஆயிரம் வீடுகள் கட்டி முடித்துவிட்டோம். மீதமுள்ள வீடுகள் பணியும் விரைந்து நடைபெற்றுகொண்டு வருகிறது! இதை நான் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டே இருக்கிறேன் - கேட்டுக் கொண்டே இருப்பேன்.

இதேபோல், ஒன்றிய அரசு வீடு கட்டும் திட்டமும் இருக்கிறது! அது ஒரு திட்டம் வைத்திருக்கிறார்கள். யாருடைய பெயரில்? பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டம் என்று அதற்குப் பெயர்! ஒரு வீடு கட்டுவதற்கு

1 இலட்சத்து 20 ஆயிரம் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இதில், 60 விழுக்காடு நிதியை ஒன்றிய அரசும், 40 விழுக்காடு நிதியை மாநில அரசும் தர வேண்டும். ஒரு இலட்சத்து இருபது ஆயிரத்தில் வீடுகட்ட முடியுமா? அதிலும் 60 சதவீதம் அதாவது, 72 ஆயிரம் ரூபாய் தான் ஒன்றிய அரசு தருகிறது. மீதி கூடுதலாக, நம்முடைய மாநில அரசு, ஒரு இலட்சத்து 62 ஆயிரம் ரூபாயை வழங்கி வீடு கட்டித் தருகிறோம்.

பெயர்தான் அவர்களுடையது! நிதி நம்முடையது! அதனால்தான், நான் ஏற்கெனவே ஒரு டயலாக்கை நினைவு படுத்தினேன்... "மாப்பிள்ளை அவர்தான்; ஆனால், அவர் அணிந்து கொண்டிருக்கக்கூடிய சட்டை என்னுடையது"! இப்படிதான், தமிழ்நாட்டிற்குத் தர வேண்டிய நிதியை ஒழுங்காகத் தருவது இல்லை! தந்தாலும் அரைகுறைதான்!

**மக்களை மதத்தாலும், சாதியாலும் பிளவுபடுத்த முயற்சிக்கிறது பா.ஜ.க.!**

இந்த நிலையில் ஒன்றியத்தில் இருக்கின்றவர்களின் எண்ணம் எப்படி இருக்கிறது? தமிழ்நாட்டு மக்களை மதத்தால் - சாதியால் - பிளவுபடுத்த தொடர்ந்து முயற்சி செய்து வருகிறார்கள். அவர்களால் முடியாதபோது, இங்கு இருக்கக்கூடிய அ.தி.மு.க. கட்சியையும் சேர்த்துக்கொள்கிறார்கள். நாம் கேட்பது, நாட்டில் வளர்ச்சி சரிகிறது... மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது... வேலைவாய்ப்பு இல்லை என்று சொன்னால், பி.ஜே.பியும், அ.தி.மு.க.வும் மக்களைப்பற்றி கவலைப்படாமல், மதத்திற்காகக் கவலைப்படுகிறார்கள்! இதுதான் அவர்களுடைய அரசியல்.

தமிழ்நாட்டில் மதத்திற்கு ஆபத்து என்று அ.தி.மு.க.வை வைத்துக்கொண்டு, பா.ஜ.க. பேசுகிறார்கள்! உண்மையில், தமிழ்நாட்டில் பா.ஜ.க. கூட்டணிக்கு தான் ஆபத்து! மிஸ்டு கால் கொடுத்தும் கட்சியை வளர்க்க முடியாமல் போனவர்கள், தங்களின் அரசியல் இலாபத்திற்கு கடவுள் பெயரை 'மிஸ்-யூஸ்' செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களின் போலி பக்தியை அரசியல் நாடகத்தை இங்கு யாரும் ஏற்க மாட்டார்கள். இது தமிழ்நாடு, தந்தை பெரியார் உருவாக்கிய மண் - அண்ணா வளர்த்த மண் - கலைஞர் அவர்கள் மீட்ட மண் - தமிழ்நாடு அனைத்து மதத்தினரும் தங்கள் உரிமையோடும் - பிற மதத்தினரோடு நல்லிணக்கத்தோடும் வாழுகின்ற மண் இது.

**மதத்தை வைத்து அரசியல் செய்வோம்!**

கடந்த 4 ஆண்டு காலத்தில், தமிழ்நாடு வரலாறு காணாத அளவிற்கு 3 ஆயிரம் கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தி இருக்கிறோம்! அதேபோல், 84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேவாலயங்களையும் - மசூதிகளையும் புனரமைக்க நிதி ஒதுக்கியிருக்கிறோம். இதுதான் நம்முடைய திராவிட மாடல். இதை எல்லாம் பார்த்துதான் மதவாத அரசியல் செய்கின்றவர்களுக்கு பற்றிக் கொண்டு எரிகிறது. அவர்களால் தமிழ்நாட்டிற்குச் செய்த வளர்ச்சியைப்பற்றிப் பேச முடியவில்லை - ஓட்டு கேட்க முடியவில்லை - முடியாது. செய்திருந்தால்தான், சொல்ல முடியும்! அதனால் தான், இப்போது மதத்தை வைத்து அரசியல் செய்யலாம் என்று பார்த்தால், அங்கும் தி.மு.க. ஸ்கோர் செய்துவிட்டார்களே என்று கதறிக்கொண்டு இருக்கிறார்கள்.

ஏதாவது குழப்பத்தை ஏற்படுத்த படாதபாடுபடுகிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது., மீண்டும் சொல்கிறேன் - இந்த மண், தந்தை பெரியார் பண்படுத்திய மண்! பேரறிஞர் அண்ணாவால் மேன்மைப்படுத்தபட்ட மண்! தலைவர் கலைஞர் அவர்களால், வளர்க்கப்பட்ட மண்! இப்படிப்பட்ட தலைவர்களை நீங்கள் கொச்சைப்படுத்தி வீடியோ போடுகிறீர்கள்! அதை கைகட்டி வேடிக்கை பார்க்கிறது, அண்ணா பெயரில் கட்சி நடத்தும் கூட்டம்! அண்ணா பெயரையே, அவர்கள் அடமானம் வைத்துவிட்டார்கள். இன்றைக்கு, கட்சியை அடமானம் வைத்திருப்பவர்கள்... நாளைக்கு, தமிழ்நாட்டை அடமானம் வைக்க நாம் அனுமதிக்கக் கூடாது! தமிழ்நாடும், தன்மானமுள்ள தமிழ்நாட்டு மக்களும் இந்த மண்ணுக்கு எதிராக பின்னப்படும் சதிவலைகளின் நோக்கத்தைப் புரிந்து, தமிழினத்திற்கு எதிரானவர்களுக்கும் - எதிரிகளுக்குத் துணை போகும் துரோகிகளுக்கும் - ஒருசேர பாடம் புகட்ட வேண்டும்!

உங்களுக்கு அரணாக என்றைக்கும் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம், இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எப்பொழுதும் இருப்போம்! இருப்போம்! அதேபோல, நீங்கள் என்றைக்கும் எங்களுக்குத் துணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# திருப்பத்தூர் மாவட்டத்தில் ரூ.517 கோடி செலவில் நலத்திட்ட உதவிகள் - முதல்வர் வழங்கினார்!

## முதல் பக்கத் தொடர்ச்சி

மயானச் சுற்றுச் சுவர்கள், நெல்லிவாசல்நாடு பகுதியில் 17 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய அங்கன்வாடி கட்டடம், அத்தனாவூர் பஞ்சாயத்து யூனியன் துவக்கப் பள்ளியில் 17 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர், சீகஜொனை முதல் பாறைகோட்டை மற்றும் பெரியூரில் உள்ள சாலையில் 26 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் செலவில் கல்வெர்ட்டுகள், மங்கலம், புலியூர், சின்னவட்டனூர், கோம்பை, நடுக்குப்பம், அருமல்பட்டு, சீகஜொனை, மாம்பாக்கம் ஆகிய இடங்களில் 1 கோடியே 5 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் செலவில் கதிரடிக்கும் தளங்கள், மலையாண்டிப்பட்டி, தகரக்குப்பம், பெரும்பள்ளி, மங்கலம், ஏரிப்பாறை, அத்தனாவூர் ஆகிய இடங்களில் 52 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் செலவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், மாம்பாக்கத்தில் 8 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் செலவில் நியாயவிலைக் கடை, சீகஜொனை மற்றும் பெரியூர் ஆகிய இடங்களில் 17 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய போர்வெல், மோட்டார் பம்ப் செட்டுடன் துணைக் கருவிகள் மற்றும் பம்ப் ரூம்கள், மாம்பாக்கத்தில் 6 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவில் மயான காத்திருப்போர் கூடம், மாம்பாக்கம், அரசமரத்துக்கொல்லை, சின்னவட்டனூர் மற்றும் மாம்பாக்கம் ஆகிய இடங்களில் 21 இலட்சத்து 81 ஆயிரம் ரூபாய் செலவில் புதிதாக கிணறு, மோட்டார், குழாய் மற்றும் ஏற்கனவே உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு கேபிள் மற்றும் உறிஞ்சுக் குழாய் இணைப்புகள், நெல்லிவாசல் மற்றும் மேல்பட்டு ஆகிய இடங்களில் 11 இலட்சத்து ஆயிரம் ரூபாய் செலவில் புதிய கிணற்றுடன் பவர் பம்ப் மற்றும் கேபிள் ஒயர் பணிகள், ஏரிப்பாறை மற்றும் பரக்கோட்டை ஆகிய இடங்களில் 7 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் செலவில் திறந்தவெளி கிணற்றிலிருந்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வரையில் பைப்லைன் பணிகள், மாம்பாக்கத்தில் 4 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் செலவில் வீட்டுக்குழாய் நீட்டிப்பு செய்யும் பணிகள், மங்கலத்தில் 1 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய குழாய் இணைப்புகள், பெரியூரில் 1 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய் செலவில் திறந்தவெளி கிணற்றில் பம்ப் அறை;

**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில்,** ஆம்பூர் - சான்றோர்குப்பம், பெத்லேகம், கஸ்பா, கோவிந்தாபுரம் ஆகிய நகராட்சி நடுநிலைப் பள்ளிகளில் 2 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் வகுப்பறைக் கட்டடங்கள்;

**வனத்துறை சார்பில்,** திருப்பத்தூரில் 29 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் வனத்துறை ஆய்வு மாளிகை கட்டடம், திருப்பத்தூர் மற்றும் ஆலங்காயம் ஆகிய இடங்களில் 40 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் வனச்சரக அலுவலகக் கட்டடங்கள்;

**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில்,** மேலூர், மேல்பட்டு, சின்னமூக்கனூர், பெரிய கம்மியம்பட்டு ஆகிய இடங்களில் 61 இலட்சத்து 81 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய அங்கன்வாடி மையக் கட்டடங்கள்;

**கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில்,** குனிச்சியில் 58 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கால்நடை மருந்தகக் கட்டடம்;

என மொத்தம், 174 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் 90 முடிவுற்றப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**திருப்பத்தூர் மாவட்டத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் விவரங்கள்**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவுக் கட்டடம்;

**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில்,** திருப்பத்தூரில் 4 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நகராட்சி அலுவலகக் கட்டடம்;

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில்,** மாதனூர் மற்றும் கந்திலி ஆகிய இடங்களில் ஊராட்சி ஒன்றிய கட்டடங்கள், திருப்பத்தூர் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் 27 சாலை அமைக்கும் பணிகள், பிச்சனூர், வெலக்கல்நத்தம், ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் கட்டடங்கள், ஆண்டியப்பனூர் மற்றும் பச்சூர் ஆகிய இடங்களில் பொது சுகாதாரப் பிரிவு தொகுதிக் கட்டடங்கள், நாய்க்கனேரி, வெள்ளக்குட்டை,

சு. பள்ளிப்பட்டு, பச்சூர் ஆகிய இடங்களில் துணை சுகாதார மையக் கட்டடங்கள், நடுப்பட்டறை, பலப்பனூர், மாதக்கடப்பா, பழைய வாணியம்பாடி,கிட்டபையனூர், புலிக் குட்டை, அனுமம்பட்டி, மாதனூர், ராமச்சந்திரபுரம், சிக்கனாங்குப்பம், அரசனப்பள்ளி, திம்மாம்பேட்டை, சிங்கம்பாளையம், பழைய அத்திக்குப்பம், கந்திலி, அயத்தப்பட்டு, பார்சனப்பள்ளி, அண்ணா நகர் ஆகிய ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநலைப்பள்ளிகளில் வகுப்பறைக் கட்டடங்கள், என 40 கோடியே 92 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 55 புதிய திட்டப் பணிகள்;

**வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பில்,** ஆம்பூர் உதவி ஆணையர் அலுவலகத்திற்கு 1 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய வணிகவரி அலுவலகக் கட்டடம்;

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில்,** அத்தனாவூர் மற்றும் புதூர்நாடு ஆகிய இடங்களில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய சமுதாயக் கூடங்கள்;

என மொத்தம், 68 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 60 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**திருப்பத்தூர் மாவட்டத்தில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விவரங்கள்**

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில்** 18,027 பயனாளிகளுக்கு இணையவழி பட்டாக்கள், நத்தம் நிலவரித் திட்டத்தில் பட்டாக்கள், கிராம கணக்குகளில் மாறுதல், கிராம நத்தம் (ஊரகம் மற்றும் நகரம்), சிறப்பு வரன்முறைப்படுத்துதல் (ஊரகம் மற்றும் நகரம்), தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், நத்தம் நிலவரித்திட்ட கணினி திருத்தம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டுத் திட்டம், ஆதிதிராவிடர் தனி வட்டாட்சியர் வாயிலாக பட்டாக்கள், 12,754 பயனாளிகளுக்கு ஆதரவற்ற விதவை, பழங்குடியினர் சாதி மற்றும் இதர சான்றிதழ்கள்;

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில்** 600 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் உதவிகள், மகளிர் திட்டத்தில் 18,000 பயனாளிகளுக்கு சுயஉதவிக் குழு வங்கிக்கடன், சமுதாய முதலீட்டு நிதி, சமுதாய தொழில் முனைவோர் நிதி, மதிசிறகுகள் ஓரிடர் சேவை மையம், ஆதார நிதி ஆகிய திட்டங்களில் உதவிகள்;

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில்** 21,720 பயனாளிகளுக்கு ப்ரீ மெட்ரிக் உதவித்தொகை, போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை, பெண் கல்வி ஊக்கத்தொகை, பழங்குடியினர் நலவாரிய அடையாள அட்டைகள்;

**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில்** 9,276 பயனாளிகளுக்கு இலவச தையல் இயந்திரங்கள், விதவை மகள் திருமண நிதிஉதவித் திட்டம், கலப்பு திருமண நிதி உதவித் திட்டம், ஆதரவற்ற பெண்களுக்கான நிதி உதவித் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் ஆகிய திட்டங்களில் உதவிகள்;

**மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில்** 450 பயனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர்கள், தையல் இயந்திரங்கள், காது கேட்கும் கருவிகள், பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலிகள், கைப்பேசி கருவிகள், சக்கர நாற்காலிகள்;

**வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில்** 4,008 பயனாளிகளுக்கு விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் வழங்குதல், குறுவைநெல் சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டம், மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம், மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், தமிழ்நாடு சிறுதானிய இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், தேசிய சமையல் எண்ணெய் பாதுகாப்பு இயக்கம், நுண்ணீர் பாசனத் திட்டம், ஒருங்கிணைந்த பண்ணை அமைப்பு, தேசிய உணவு மற்றும் பாதுகாப்பு இயக்கம், பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களில் உதவிகள்;

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில்** 3,503 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகள், மகளிர் சுயஉதவிக் குழு கடன், பயிர் கடன், கால்நடை பராமரிப்பு கடன்;

**தாட்கோ சார்பில் 841 பயனாளிகளுக்கு** முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவுத் திட்டம், பழங்குடியின மகளிர் சுயஉதவி குழுக்களுக்கான பொருளாதார கடனுதவித் திட்டம், நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டம், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நலவாரிய உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அடையாள அட்டைகள் போன்ற பல்வேறு உதவிகள்;

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில்** 602 பயனாளிகளுக்கு திருமண உதவித்தொகை, இயற்கை மரண உதவித் தொகை, விபத்து உதவித்தொகை, ஓய்வூதியம், கல்வி உதவித்தொகை, பணியிடத்து விபத்து மரணம் ஆகிய திட்டங்களில் உதவிகள்;

என பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 273 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 1,00,168 பயனாளிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

நேற்று நடைபெற்ற திருப்பத்தூர் மாவட்ட அரசு விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மொத்தம் ரூ.517 கோடி செலவிலான 90 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 60 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 1,00,168 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த விழாவில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்

ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் டி.எம்.கதிர்ஆனந்த், சி.என். அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் க.தேவராஜி, ஏ.நல்லதம்பி, அ.செ. வில்வநாதன், திருமதி. அமுலுவிஜயன், பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி க. சிவசௌந்திரவல்லி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.